Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இந்நூலகம்.

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 28 12-07-94 செவ்வாய்க்கிழமை ஓசை 144

## வடக்கு கிழக்கு சுகாதார பிரச்சினை லண்டன் மாநாட்டில் ஆராய்வு

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போரினால் வடக்கு கிழக்கு மக்களிடையே தோன்றியுள்ள சுகாதார பிரச்சினைகள் குறித்தும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவிகள் குறித்தும் ஆராய எதிர்வரும் செப்டெம்பர் மாதம் லண்டனில் மாநாடு ஒன்று நடைபெற உள்ளது. லண்டன் வைற்சப்பலில் உள்ள ரோயல் லண்டன் மருத்துவமனையில் செப்டம்பர் 17, 18ஆம் திகதிகளில் இந்த சுகாதார மாநாடு நடைபெறவுள்ளது. லண்டனில் உள்ள தமிழர் மருத்துவநிலையம் மற்றும் தமிழ் தகவல் நிலையம் என்பன கலிபோர்னியாவிலுள்ள தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன. சர்வதேச ரீதியாக நடைபெறும் இம்மாநாட்டில் (4-ம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலில் ஹேமாபிரேமாவிற்கு இடமில்லை

## மூன்று பொதுமக்கள் அதிரடிப்படையால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலைப் பகுயில் சிறிலங்கா இராணுவ அதிரடிப்படையினர் கடந்த வெள்ளியன்று மூன்று பொது மக்களைக் கைதுசெய்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை, இலுப்பையடிச்சேனை, விழாத்தியடி ஆலய உற்சவம் நடக்கும்போது மாலை 4-50 மணியளவில் நெல்லிக்காட்டைச் சேர்ந்த வெற்றிவேல் திருச்செல்வம், காலைபோட்ட மடுவைச் சேர்ந்த நாகமணி விஜயன், கண்ணன்குடாவைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி மகேந்திரன் ஆகிய பொதுமக்கள் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

## கொழும்பு மாவட்ட செயலகத்திலிருந்து கண்ணீர் மல்க வெளியேறினார்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திற்கென நேற்று ஐக்கிய தேசியக்கட்சி தாக்கல் செய்த வேட்பாளர் பட்டியலில், திருமதி ஹேமா பிரேமதாசாவின் பெயர் இடம்பெறவில்லை. வேட்புமனுவில் கையொப்பம் இடுவதற்கென கொழும்பு, மாவட்ட செயலகத்திற்கு வந்திருந்த ஹேமா பிரேமதாசா பலத்த ஏமாற்றத்தின் மத்தியில் கண்ணீர் மல்க செயலகத்தில் இருந்து வெளியேறிச் சென்றார்.

(கொழும்பு)

கொழும்பு மாவட்டஐ.தே.க வேட்பாளர் பட்டியலில் தமது பெயரும் இடம் பெற்றிருக்கும் என்ற நம்பிக்கையுடன் மாவட்ட செயலகத்திற்கு வந்திருந்த திருமதி ஹேமா பிரேமதாசா மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்ப நேரிட்டது.

தனது பெயரை வேட்பாளர் பட்டியலில் இறுதி நேரத்திலாவது சேர்க்க வேண்டுமென தன்னால் இயன்ற சகல முயற்சிகளையும் மேற்கொண்ட போதும் அம்முயற்சி பயனளிக்கவில்லை.

ஆளும் ஐ.தே.க. சார்பாகத் தான் போட்டியிடப் போவதில்லை என்று முன்னதாக திருமதி ஹேமா பிரேமதாசா கூறிவந்த போதும் கூட ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிற்கும் அவருக்கும் இடையிலான உடன்பாட்டின் அடிப்படையில் போட்டியிட முன்வந்திருந்தார் என்பது தெரிந்ததே.

## இராணுவத்தளபதியை கொல்ல மூன்றுமுறை முயற்சி நடைபெற்றதாம்


(கொழும்பு)

இராணுவத்தளபதி ஜெரி டி சில்வாவை கொழும்பில் வைத்துக் கொல்ல கரும்புலிகள் மும்முறை முயற்சி செய்தும் அது மயிரிழையில் தவறிவிட்டதாக சண்டே ரைம்ஸ் பாதுகாப்புத்துறை செய்தியாளரின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கில் அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களை அழிப்பதன் மூலம் அங்கு குழப்பத்தை ஏற்படுத்தி யாழ் குடாநாட்டின் மீதான தாக்குதலை நிறுத்துவதே விடுதலைப்புலிகளின் திட்டம் தெற்கை பலவீனமான தாக்குவதன் மூலம் இராணுவம் நகர் வற்றதாக செய்தால் தமிழீழத்திற்கான படிக்கற்களாக அது அமையும் என விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடம் திட்டமிட்டிருந்தது எனவும் அப்பத்திரிகை குறிப்பிடுகிறது.

உலகின் தீவிரமான, திறமையான ஓர் அமைப்புடன் இன்று சிறிலங்கா அரசு (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



## தேர்தல் கால படையெடுப்பிற்கு அரசாங்கத்தரப்பில் அச்சம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கிடைக்கக்கூடிய வாக்குகளை கருத்திற்கொண்டு யாழ் குடாநாடு மீதான பெரும் இராணுவ நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவிக்கிறது.

யாழ்குடாநாடு மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்படின் கடும் உயிரிழப்புகள் ஏற்படும் படையினரின் சடலங்கள் தென்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு வந்து சேரத் தொடங்குவது தேர்தலில் அரசின் வாக்கு வங்கியை பாதிக்கும் என கருதப்பட்டதால் இந்த இராணுவத்திட்டம் கைவிடடதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகைமேலும்குறிப்பிட்டுள்ளது.

## ரணில் விக்கிரமசிங்காவுடன் ஹேமா பிரேமதாசா வாக்குவாதம்!

### வேட்பாளர் பட்டியலில் சேர்க்குமாறு வற்புறுத்து

## கொழும்பு-ரணில்; கம்பஹா-சந்திரிகா

# கொழும்பு-ரணில்; கம்பஹா-சந்திரிகா நேற்று தேர்தல் வேட்புமனு தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தினமான நேற்று பல மாவட்டங்களில், பிரதான கட்சிகள் சுயேட்சைக்குழுக்கள் என்பன வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன

கொழும்பு தேர்தல்மாவட்டத்தில் ஏழுஅரசியல் கட்சிகளும், ஒரு சுயேட்சைக் குழுவும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன. சுயேட்சைக் குழுவின் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்பட்டது ரெலோ கொழும்பில் போட்டியிடுகின்றது பிரதானஅரசியற் கட்சிகள் முன்பே 'கொழும்பு தேர்தல மாவட்டத்துக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தன.

இரு நியமனப் பத்திரங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட எதிர்மனுக்கள் கொழும்பு தேர்தல் அத்தாட்சி அலுவலரால் நிராகரிக்கப்பட்டன குமார் பொன்னம்பலம், டி.சி அபேரட்ணவின் வேட்புமனு தொடர்பாக சமர்ப்பித்திருந்த எதிர்மனுவும் இவற்றில் அடங்குகின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)



2ஆம் லெப். மலையப்பன் (தியாகராசா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 7-ந் திகதி மாலை 7.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம் பெற்ற மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

2ஆம் லெப்டினன்ட் மலையப்பன்/தியாகரசா (குழந்தைவேல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மதன்பகுதியில் தேர்தல் வன்முறைகள்

# கட்சி ஆதரவாளர்களிடையே மோதல் வேட்பாளர் உட்பட 50 பேர் காயம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதி நாளான நேற்று பல மாவட்டங்களில் ஆதரவாளரிடையே மோதல்கள் ஏற்பட்டதாகவும் இதில் ஐம்பதிறகு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், இரண்டு சிறிலங்கா பொலிசார் உட்பட பலர் கடுமையான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

களுத்துறை மாவட்ட செயலகத்தின் முன்னால் நடைபெற்ற மோதலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் மேற்படி மாவட்டத்தில் போட்டியிடும் றெஜினோல்ட் குரே உட்பட பதினைந்து பேர் கடுமையான காயங்களினால் நாகொட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் சுமார் பத்துக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வெளியேறியதாகவும் தெரிய வருகின்றது.

இதே போன்று அநுராதபுரத்தில் நடைபெற்ற கட்சி மோதலில் இரண்டு பொலிசார் உட்பட பதினைந்துக்கு மேற்பட்டவர்கள் கடுமையான காயங்களுடன் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிய வருகின்றது.

கண்டி நகரிலும் பல வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதாகவும் உடனடியாக விசேட இராணுவ-பொலிஸ் குழுவினர் அழைக்கப்பட்டதை தொடர்ந்து நிலைமை

(4ஆம் பக்கம் பார்க்க)

## 2000 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதி நாளான நேற்றுடன் 31 அரசியல் கட்சிகளும் மற்றும் சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்த சுமார் 2000 பேர் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர்.

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளுதல் நேற்று நண்பகலுடன் முடிவடைந்துவிட்டது என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் உத்தியோகத்தர் தெரிவு, வாக்குச் சீட்டுகள் அச்சிடுதல் மற்றும் தேர்தல் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வேட்பாளர் பட்டியலில் சேர்க்குமாறு வற்புறுத்து

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட அரசாங்க செயலகத்தில் வைத்து ஐக்கியத்தேசியக் கட்சியின் உயர் தலைவர்களுடன் முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா நீண்ட நேரம் வாக்குவாதப்பட்டதாக மாவட்ட அரசாங்க செயலக வட்டாரங்கள் கூறியுள்ளன-

ஐ தே.க வின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியல் முதன்மை வேட்பாளர் ரணில்விக்கிரம சிங்காவினால் கொழும்பு மாவட்டஅரசாங்க செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டது. தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்கப்படுவதற்கு முன்பாக வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றவர்களின் பார்வைக்கு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட போது அதில் தமது பெயர் இடம் பெற்றிருக்காததைக் கண்ட திருமதி ஹேமா பிரேமதாசா அதிர்ச்சி யுற்றதாக காணப்பட்டார்- இதனைத் தொடர்ந்து அவர் முதன்மை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்- தமது முடிவில் மாற்றம் செய்ய முடியாது என்று பிரதமரும், முதன்மை வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கா அப்போது திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்,

இதனைத் தொடர்ந்து ஹேமா பிரேமதாசா அவச

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே. கட்சி எனக்கு துரோகம் செய்துவிட்டது

- ஹேமா பிரேமதாசா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தனக்குத் துரோகம் இழைத்துவிட்டது என வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்காத நிலையில் திருமதி ஹேமா பிரேமதாசா தெரிவித்தார். கொழும்பு மாவட்டச் செயலகத்தின் முன்னால் கூடிநின்ற தனது ஆதரவாளர்களிடம் கண்ணீர் மல்கிய நிலையில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசும் போது ஹேமா பிரேமதாசா இதனைத் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து அவரின் ஆதரவாளர்கள் அமைதியாக கலைந்துசென்றதாகவும் தெரிய வருகின்றது·

## சேமமடு மோதலில் இரு போராளிகள் வீரச்சாவு

சேமமடு 2ஆம் யூனிற், ஊற்றுக்குளம் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நற்று முனதினம் காலை நேரடி மோதல் இடம்பெற்றது


இச்சம்பவத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

இம் மோதலில் இரு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்

(4ஆம் பக்கம் பார்க்க)



2ஆம் லெப். மணியம்



வீரவேங்கை பத்மசிலன்

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலயம் 1 ஐச் சேர்ந்த நல்லூர், யாழ்ப்பாணம் கோட்டத்தின் சகல பாடசாலை அதிபர்களையும்இன்று பி பகல் 2.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் விசேட சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பதிவு செய்யப்பட்ட லம்பிறட்டா S×125 இன ஸ்கூட்டர் மேல திக உதிரிப் பாகங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: கி.சிறீ, ஊறணி.வல்வெட்டித்துறை. (8783)

### தவறிவிட்டது

மூக்குக் கண்ணாடி ஒன்று கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் கருவேலடி லேனிற்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். கோயில் வீதி, நந்தாவில் அம்மன் கோயில் கொக்குவில், கிழக்கு. (8784)

### சீவாளி

சீவாளி (நாதஸ்வர நறுக்கு) விற்பனைக்குண்டு. கமலேஸ்வரி களஞ்சியம் 119|2, கே. கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 8783.

### பரிசளிப்பு விழா

ஆனைக்கோட்டை றோ. க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை முன்றலில் அதிபர் திருமதி ச. சோமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

### கல்வி ஊக்குவிப்பு

காரைநகர் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்குமுகமாக இவ்வருடம் ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கெனஇரண்டு பரீட்சைகளை வாரிவளவு நல்லியக்கச் சபயினர் நடாத்தவுள்ளனர். முன்னோடிப்பயிற்சி, போட்டிப் பரீட்சைகள் இம் மாதம் 16-ம் திகதியும் 23-ம் திகதியும் நாவலர் ம வி. யிலும் வட்டுக்கோட்டை யாழ்ற்ரன் கல்லூரியிலும் நடத்தப்படும். இப்பரீட்சைகளில்காரை. மாணவர்கள் எப்பாடசாலைகளில் கற்றாலும் தோற்றத் தகுதியுடையவராவர். இவ்விரு பரீட்சைகளிலும், அரச புலமைப்பரிசில்

# லிபரல் கட்சி யோசனைகளை சுதந்திரக்கட்சி திருடியது

## லிபரல் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐ. தே. க. தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளை திருடி. தனது விஞ்ஞாபனத்தில் சேர்த்துள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சாட்டி வரும் இவ்வேளையில் லிபரல் புதிய பிரச்சினை ஒன்றை கிளப்பியுள்ளது.

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் சில பகுதிகளை பொதுஜன ஐக்கிய முன்னணி திருடி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துள்ளதாக லிபரல் கட்சி இப்போது குற்றஞ்சாட்டி வருகிறது. ஐ. தே. க. தேசியப்பட்டியலில் இடம் பெறலாம் எனக் கருதப்படும் லிபரல் கட்சித் தலைவர் சானக அமரதுங்க இது குறித்துமேலும் தெரிவிக்கையில், தமது கட்சியிலிருந்து சுதந்திரக்கட்சிக்கு மாறிய ரோகான் எதிரிசிங்க லிபரல் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் சில பகுதிகளை திருடிச் சென்று கொடுத்து விட்டார் என்றார்.

22-வது பிறந்தநாள் நினைவும்

36-வது இறந்தநாள்

நினைவலைகளும்

"மீண்டும் நீ பிறவாயோ"



செல்வி கனகசுந்தரம் ஜமுனா

பிறப்பு: 1973 07-12

இறப்பு: 1994-06-07

அம்மா... எம் அருமை ஜமுனாவே!
அன்புக்கினிய எம் மகளே!
ஆல மரம் போல் நீ வளர்ந்து
ஆறுதல் தருவாய் என நினைந்து
பெயரும் புகழும் நிலைத்திடவே
பெற்ற அன்னை மகிழ்ந்திடவே
ஆசையுடன் உனை வளர்த்திடவே
ஆலமரம் நீ சரிந்திடவே
ஆறுதல் தேடி தவிக்கின்றாள்- அன்னை
அவனியில் வாழ துடிக்கின்றாள்

அம்மா...
"மீண்டும் ஒரு முறை பிறவாயோ- எம்
மனங்கள் மகிழ மலராயோ".

உன் பிரிவால் வாடும்
அம்மா, மம்மி
சகோதர சகோதரிகள்,
மைத்துனன், மைத்துனிமார்,
மக்கள், மருமக்கள்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.
(8776)

ஓராண்டு நினைவஞ்சலி

காமினி பொன்சேகா கூட்டிய

# செய்தியாளர் மாநாட்டில் கடும் சொற்பிரயோகம்

(கொழும்பு)

செய்தியாளர் மாநாட்டில் வெறிகாரன், குடிகாரன் என்பன போன்ற வார்த்தைகள் உட்பட கடுமையான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன.

ஐ.தே.கவிலிருந்து வெளியேறியுள்ள முன்னாள் பிரதி சபாநாயகர் பொதுமக்கள் முன்னணியுடன் இணைவது தொடர்பாக தான் எடுத்த தீர்மானத்தை விளக்குவதற்காக ஒழுங்குசெய்யப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கடும் வார்த்தைப் பிரயோகங்கள் இடம் பெற்றன.

இச் செய்தியாளர் மாநாட்டில்ஐ தே.கவின் கொள்கைகள்மற்றும்இலட்சியங்கள்எழுத்துக்களிலேயேஇருக்கின்றது எனவும், அமைச்சர்களின் ஊழல்கள் தொடர்பாக கட்சி மேலிடம் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இச் சந்தர்ப்பத்தில் செய்தியாளர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். இதனையடுத்து கடும் வார்த்தைப் பிரயோகங்கள் இடம் பெற்றன.

## முன்னோடி பரீட்சை

(தொல்புரம்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த காரைநகர் மாணவர்களுக்கான ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சைகள் வாரிவளவு நல்லியக்க சபையினால் நடாத்தப்படவுள்ளன.

காரைநகர் மாணவர்கள் எந்தப் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருப்பினும் இந்த பரீட்சையில் தோற்றத் தகுதியுடையவர் ஆவர் எனவும், இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுதிகதி இன்றாகும்.

பளை - கச்சார்வெளி

திருவருள் மிகு

வல்லபாம்பிகா சமேத விநாயகப்பெருமான்

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியா நிகழ்ச்சிகள்

13. 07. 1994 -
புதன்கிழமை முன் இரவு 10.34 மணி: கும்பாபிஷேக கிரியாரம்பம்.

14. 07. 1994 -
வியாழக்கிழமை காலை 8. 00 மணி: பக்தர்கள் எண்ணெய்க்காப்பு 2. 00 மணி வரை நடைபெறும் மாலை 4 00 மணி: பிம்பசுத்தி நடைபெறும்.

15. 07 1994 -
வெள்ளிக்கிழமை காலை 8. 21 தொடக்கம் 9. 20 வரை தூபி அபிஷேகமும், 10. 09 வரையுயுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது. கும்பாபிஷேக கிரியைகளை கிரியாமணி, வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் (ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை) தலைமையேற்று நடத்துவார்கள். தொடர்ந்து 21 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினரும்
ஊர்ப் பொதுமக்களும்.
(8781)

கச்சார்வெளி,
பளை

## நினைவு கூருகின்றோம்...

### 12.07.1994....

1986-ம் ஆண்டு இதேதினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் (மன்னார் விடத்தல்தீவு) பயணம் செய்து கொண்டிருக்கையில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்கு வானூர்திபிலிருந்து மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பல தமிழர்கள்

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

★ **ஜெயா** (இராமச்சந்திரன் ஜெபசுந்தரம்-பெரிய புல்லுமலை-மட்டு)

அம்பாறை-எருவில் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நகுலன்** (இளையதம்பி அருளானந்தம்-பொத்துவில் 03-அம்பாறை)

**சந்திரன்** (இ சந்திரன்-அக்கரைப்பற்று-அம்பாறை)

வல்வெட்டித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சுந்தர்** (நாகராசா திபாகசீலன்-செல்வபுரம்-முல்லைத்தீவு)

வல்வை வெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப்.சலீம்** (சண்முகசுந்தரம் அரவிந்தன்-கரணவாய் தெற்கு, கரவெட்டி-யாழ்)

**ஞானி** (நல்லதம்பி சிவஞானம்-மத்தொனி, கரவெட்டி - யாழ்)

யாழ்-நெல்லியடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.டெனிஸ்** (பரமரட்சகபாலன் அனுரா-லெப்.கேணல் பொன்னம்மான் வீதி-யாழ்)

யாழ்-அச்சுவேலி, வளலாயில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**குட்டிக்கண்ணா** (சுவாமிநாதன் கரிகரன்-தாவடி வீதி, சுதுமலை-யாழ்)

யாழ்-திருநெல்வேலியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த.

**சரளன்** (சிவசுப்பிரமணியம் தனஞ்செயன் காங்கேசன்துறை வீதி, கோண்டாவில்-யாழ்)

பருத்தித்துறை-சக்கோட்டை, புனித சேவியர் தேவாலயத்தின்மீது பருத்தித்துறை முகாமில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கணவன்,

வராவர். இவ்விரு பரீட்சைகளிலும், அரச புலமைப்பரிசில் பரீட்சையிலுமாக மொத்தம் 540 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்களுக்கு 1000 ரூபா பெறுமதியான சேமிப்பு சான்றிதழ் வழங்கப்படுமென வாரிவளவு நல்லியக்கச் சபையினர் அறிவித்துள்ளனர்.

---

## பட்டப் பின்கல்வித் தகைமை கற்கை நெறி 1993/94

பட்டப் பின் கல்வித் தகைமை கற்கைநெறிக்கான அனுமதிப் பரீட்சை 1994-07-22 ஆம் திகதி இராமநாதன்மண்டபத்தில் நடைபெறும். இப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் 1994-07-18 ஆம் திகதி தொடக்கம் 1994-07-21 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.


அனுமதிப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

இப் பரீட்சையில் சித்தியடைந்தோர் நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது நிரந்தர பட்டதாரி ஆசிரியருக்கான நியமனக் கடிதம் கொண்டு வருதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
07-07-1994 (சி-9794)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு.
**சுப்பர் செல்லர் அவர்கள்**
(அச்சுவேலி)

மலர்வு: 1927-04-12
உதிர்வு: 1993-06-23
திதி: 1994 07-12

ஆண்டு ஒன்று ஆயிடினும்
நினைக்கின்றோம் ஐயா உங்கள்
நற்பண்கள் தன்னை நாங்கள்
வடிக்கின்றோம் கண்ணீர் நாமும்
பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற - ஐயாவே
எப்பிறவி தனில் உம்மை
இனி நாங்கள் காண்பதுவோ ?

உங்கள் பிரிவால் துடிக்கும்,
அன்பு மனைவி: திருமதி செ, சின்னத்தங்கம், மக்கள்: குகனேஸ்வரன் (பிரான்ஸ்), சிவராசா (பிரான்ஸ்), புஸ்பராசா (பிரான்ஸ்), தயாநிதி (பிரான்ஸ்), கோமளநிதி (நோர்வே), சிவேஸ்வரி (இலங்கை), மருமக்கள் : தம்பிராசா (பிரான்ஸ்). லீலாதேவி (பிரான்ஸ்), சிவயோகம் (பிரான்ஸ்), புஸ்பலதா (பிரான்ஸ்), பஞ்சலிங்கம் (நோர்வே), இருஷ்ணகுமார் (நோர்வே) பேரப்பிள்ளைகள்.

வல்லை வீதி,
அச்சுவேலி.

தகவல்
திருமதி சின்னத்தங்கம்

(8770)

---

## ஸ்ரீபாலகதிர்காம தேவஸ்தானம்

சட்டநாதர்கோவில் பின்வீதி -நல்லூர்

## தமிழீழ ஆடிவேல் விழா

25-07-94 முதல் 25, 26, 27 ஆகிய மூன்று தினங்கள் அதிகோலாகலமாக கொண்டாடப்படும்.

**ஸ்ரீபாலகதிர்காமத்தில் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதிவழியாக யாழ்நகர் வீதிகள் அனைத்துமூடாக காங்கேசன்துறை வீதி, திருநெல்வேலி வீதிவழியாக ஆலயத்தை வந்தடையும்.**

25 07-94 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு இரத ஊர்வலம் ஆரம்பமாகி நண்பகல் 12-00 மணிக்கு வீரமாகாளி அம்மன் கோவிலை சென்றடையும். அங்கிருந்து 2-00 மணிக்கு ஆரம்பமாகி யாழ்நகர் வீதிகள் அனைத்துமூடாக மாலை 7-00 மணிக்கு வண்ணார்பண்ணை சிவன்கோவிலை சென்றடையும்.

26 07-94 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக நண்பகல் 12-00 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் கோவிலை சென்றடையும். அன்றுமாலை 3-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மாலை 7-00 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகனாலயத்தை சென்றடையும்.

27-07-94 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வீதிவழியாக நண்பகல் 12-00 மணிக்கு அரசடி சிவகாமசுந்தரி அம்மன் கோவிலை வந்தடையும். மாலை 3-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடூடாக மாலை 7-00 மணிக்கு ஆலயத்தை வந்தடையும். அத்தருணம் பக்தர்கள் புடைசூழ்ந்து எம்பெருமானை தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

**ஆடிவேல் ரதம் உருவாக்கம்:**
**திரு. ஆறுமுகம் கந்தசாமி**
**குழுவினர்,**
**திருநெல்வேலி.**

இங்ஙனம்
தேவஸ்தானம்

(சி-9799)

---

தேவாலயத்தின்மீது பருத்தித்துறை முகாமில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கணவன், மனைவி, பெண் குழந்தை உட்பட மூன்று தமிழர்கள்.

1988-ம் ஆண்டு இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **றோய்** (சிறிதரன் மரியதாஸ்-மன்னார்)

முல்லைத்தீவு-மாங்குளம், வவுனிக்குளம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகரான சில்லாலையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்

1990-ம் ஆண்டு மன்னார்-தள்ளாடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப்.மில்டன்** (கிருஷ்ணபிள்ளை தேவகுமார்-தர்மபுரம்-கிளிநொச்சி)

**பாரதி** (செபஸ்ரியான் பாலஅந்தோனி-11-ம் படிவம் தர்மபுரம்-கிளிநொச்சி)

**கலைஞன்** (தங்கராசா சுரேஸ்-சிவன்கோயில் வீதி சிவநகர் கிளிநொச்சி)

மன்னார்-மாந்தை சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.வேதமணி-செட்டி** (அப்புச்சாமி செட்டியாண்டி-இசங்கங்குளம், வட்டக்கண்டல்-மன்னார்)

**2-ம் லெப்.மயூரன்** (சண்முகநாதன் சந்திரகுமார்-விநாயகபுரம்,முழங்காவில்-மன்னார்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன் உட்பட மத்தியமுகாம் 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

திருமலையில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03-ம் கட்டை அரசினர் பாற்பண்ணை ஊழியர்களான 05 தமிழர்கள்-

**ஆகியோரை இந்நாளில் நினைவுகூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9800)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு..

குத்திட்டிகளை கொண்டு அரியணை அமைக்கலாம். அதன் மேல் அமரத்தான் முடியாது.

ட கமிலோ தெகவூர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 12-07-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05

## சிறிலங்கா 'ஜனநாயகத்தில்' இரண்டறக்கலந்துவிட்ட...

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜீத் பிரேமதாசா ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவர் இடம் பெற்றுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். சஜீத் பிரேமதாசாவின் இக் குற்றச்சாட்டு, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் எழுந்துள்ள முரண்பாடு காரணமாகக் கூறப்பட்டதாயினும், உண்மைக்குப் புறம்பானது எனத் தட்டிக் கழிக்கக் கூடியதல்ல.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதும், அவரை ஒரு வேட்பாளராகக் கட்சி நிறுத்துவதென்பது ஜனநாயகத்தின் பலவீனத்தையும், சிறிலங்கா அரசியலின் இன்றைய அவலத்தையும் வெளிக்காட்டுபவை என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இன்றுள்ள முக்கியமான கேள்வி, சஜீத் பிரேமதாசா குறிப்பிட்டது போல், பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளவர்களில் தனியாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ஒருவர் மட்டும்தான் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவரா? தேர்தலில் போட்டியிட அவருக்கு மட்டும் தான் அருகதையில்லையா? என்பதேயாகும்.

ஏனெனில் சிறிலங்காவின் அரசியல் வரலாறு கடந்த இரு தசாப்தங்களாக இரத்தம் தோய்ந்ததாகவே உள்ளது. இதற்கு முற்றுமுழுதான பொறுப்பும் இக் காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசியல்வாதிகளையே சாரும்.

1972 இல் இடம்பெற்ற முதலாவது ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது சுமார் 15,000 சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் அரசின் பணிப்பின்பேரில் படுகொலை செய்யப்பட்டனர். அதற்கு, அன்று ஆட்சியில் இருந்தவர்களே முழுப் பொறுப்பாகும். அந்த வகையில் இடது சாரிகளுடன் சேர்ந்து அன்று ஆட்சிபுரிந்த சுதந்திரக்கட்சியினரே அதற்குரிய முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

# உழைப்பேதுமின்றி நீங்கள் ஜனாதிபதியானீர்கள்

## டி.பி.விஜேதுங்காவுக்கு ஒபேவன்ச கடிதம்

(கொழும்பு)

பிரேமதாசா கடும் உழைப்பினால் தான் ஜனாதிபதியாகினார். ஆனால்நீங்களோ எத்தகைய உழைப்புமின்றி பதவிக்கு தள்ளப்பட்டீர்கள் இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுக்கு அனுப்பிய இராஜினாமா கடிதத்தில் காலிங்க ஒபேவன்ச கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், முன்னாள் ஜனாதிபதியின் கிருபையால், ஜனாதிபதி பதவியில் நீங்கள் அமர்த்தப்பட்டுள்ளீர்கள் என்பதை வலியுறுத்த வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ஜனாதிபதி பதவியின் பெயரால் உங்களுக்கு வழங்கப் பட்டுள்ள உரிமைகளை நீங்கள் சரிவரப் பயன்படுத்தவில்லை. பிரேமதாசா கடும் உழைப்பினால் தான் ஜனாதிபதி ஆகினார். ஆனால் நீங்கள் எத்தகைய முயற்சியுமின்றி இப்பதவிக்கு தள்ளப்பட்டீர்கள், பிரேமதாசாவின் உடல் அவரது வாசஸ்தலத்திற்கு கொண்டு வரப்பட முன்னரே எல்லையை நீங்கள் மீறிவிட்டீர்கள். பிரேமதாசாவின் பூதவுடலுக்கு மரியாதை செலுத்த வந்த வெளிநாட்டு ராஜதந்திரிகளை வரவேற்பதற்குக் கூட நீங்கள் தலைமை வகிக்கவில்லை. சம்பவம் நடந்த அன்றிரவு எட்டு மணி முதல் அவசர கால சட்டத்தைப் பிரகடனப்படுத்தியதன் வாயிலாக மக்கள் கூடுவதை தவிர்த்ததைஇந்தநாடு நன்கறியும். ஏழாம்நாளில் அவரது வாசஸ்தலத்தில் இடம்பெற்ற மத வைபவங்களில் நீங்கள் கலந்து கொள்ளாதது ஒரு நன்றி மறந்த செயலாகும்.

ஜனாதிபதி செயலக ஊழியர்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் போது அங்கிருந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் படங்கள் கழற்றப்பட்டு களஞ்சிய அறையில் போடப்பட்டது ஏன் என்பது எனக்கு இன்னும் விளங்கவில்லை.

ஜனாதிபதி மாளிகையில் இருந்த விலை உயர்ந்த இரத்தினங்கள்காணாமற் போனது தொடர்பாக அதிகமாக விளம்பரம் செய்யப்பட்டது இது ஜனாதிபதி பிரேமதாசாவையும் அவரது மனைவியையும், பிள்ளைகளையும், அவமதிப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது என்றே நான் கருதுகிறேன்.

அத்துடன் 1993 மாகாணசபை தேர்தலுக்காக வழங்கப்பட்ட பணம் பத்து மில்லியன் ரூபா கட்சியின் பொதுச்செயலாளரிடம் திருமதி பிரேமதாசாவினால் வழங்கப்பட்டது அப்பணத்திற்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இதனால் நான் நம்பிக்கை இழந்துள்ளேன்.

பிரேமதாசா மறைவின்பின்னர் மூன்றாவது மாதத்தில் பியகமவில் அமைக்கப்பட்ட அவரது உருவச்சிலைதிறப்பு விழாவிற்கு நான் விடுத்த அழைப்பை நீங்கள் ஏற்க மறுத்தது எனக்கு அதிர்ச்சி தருவதாகவே இருந்தது. எனவும் தெரிவித்துள்ளார்.

## ஐ. தே. கவில் போட்டியிட பிரபல நடிகர் மறுப்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் ஐ. தே. கட்சியின் யானைச் சின்னத்தின்கீழ் போட்டியிடுவாரென பலராலும் எதிர்பார்க்கப்பட்ட சிங்கள திரைப்பட நடிகர்ஜீவன் குமாரணதுங்கா தாம் அவ்வாறு போட்டியிடப் போவதில்லை எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளார். எனினும் இதற்கான காரணத்தை அவர் வெளியிடவில்லை. மேல் மாகாண சபையில் ஐ. தே. க. உறுப்பினரான இவர், பிரபலமான நடிகர்என்பதும், சிறிலங்காமக்கள் கட்சியின் காலஞ்சென்ற தலைவரான விஜயகுமாரணதுங்காவின் உறவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கம்பஹா மாவட்டத்தில் ஐ. தே. க. சார்பில் போட்டியிடுவாரென அறிவிக்கப்பட்ட ரவீந்திர ரந்தெனியவும் போட்டியிடமாட்டாரென கூறப்படுகிறது.

இதேவேளை விஜயகுமாரணதுங்காவின் நெருங்கிய உறவினரும் சினிமா நடிகருமான ரஞ்சன் ராமநாயக்கா பொது மக்கள் முன்னணிக்காக பிரசார வேலையில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளார். பிரபல நடிகைகளான அனோஜா வீரசிங்க, கீதா குமாரசிங்க ஆகியோர் இம்முறை அரசியல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளப்போவதில்லைஎனக் கூறியுள்ளனர்.

## ஜே.வி.பி பொதுத்தேர்தலில் போட்டியிட முடிவு

ஜே வி பி, என் எஸ்.எஸ் பி என்பவை உள்ளடங்கிய புதிதாக உருவாகியுள்ள தேசிய மீட்பு முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க லண்டனிலிருந்து என். எஸ்.எஸ்.பி தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ணவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் நப்புதிய முன்னணி என்.இஸ்.எஸ்.பி தலைமையின் கீழ் போட்டியிடும். காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை, மொனராகல, பதுளை ஆகிய மாவட்டங்களில் இம் முன்னணி குடை, பூச்சாடி சின்னங்களின் கீழ் போட்டியிடும்.

## இளி. வைத்தியசாலை

## மேசைப்பந்தாட்டம் சம்பியன்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த 8-ம் திகதி மாலை யாழ் பல்கலைக்கழக மேசைப் பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தில்நடாத்தப்பட்ட ஆண் இரட்டையர் ஆட்டத்தில் ''இடதுகை ஆட்டக்காரன்'' ஆர். ஜெயசீலனும் கே. சுதர்சனும் விறுவிறுப்பாக விளையாடி சம்பியன் ஆனார்கள். இதில் ஜெ. மோகனும், பி. சிவபாதசுந்தரமும் இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

ஆண் தனியாள் ஆட்டத்தில் ஜெ. மோகன் சம்பியனாகவும், பி. சிவபாதசுந்தரம் இரண்டாம் இடத்தினையும் பெற்றனர். தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் பெண் அணியின் தனியாள் ஆட்டத்தில் ஜெ. பிரதீபா சம்பியனாகவும், வை.கேசாந்தினி இரண்டாம், இடத்தினையும் பெற்றனர்.

பெண் இரட்டையர் ஆட்டத்தில் ஜே. பிரதீபாவும் எஸ். சிறிமைதிலியும் சம்பியனாகவும், வை. கே. சாந்தினியும் கே. திருமகளும் இரண்டாம் இடத்தினையும் பெற்றனர். இறுதியாக ஆண் பெண் கலப்பு ஆட்டத்தில் ஜெ. பிரதீபாவும் எஸ். நிர்மலாநந்தனும் சம்பியனாகவும், வை. கே. சாந்தினியும், ஆர். ஜெயசீலனும் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர். (50)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-07-12**
**செவ்வாய் இரவு**

08.01- ஊர்சுற்றும் ஒலி வாங்கி
08.10- அறிந்து கொள்ளுங்கள்-தகவல் களஞ்சியம்
08.20- நலந்தானா-மனிதனுடைய ஆரோக்கியமான வாழ்வை கணிக்கின்ற மருத்துவ அளவீடுகள் பற்றி சில ஆலோசனைகள்
08.30- செய்திகள்
08.40- கருத்துக் களம்- ''முயற்சி''
08.50- களமும் கானமும்- ''காவலரணும் கடிதமும்''

**1994-07-13**
**புதன் காலை**

07.02- மாவீரவணக்கம்
07.15- நீங்கள் கேட்டவை
07.30- செய்திகள்
07.35- பத்திரிகைச் செய்திகள்
07.40- நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## சரத் அமுனுகம ராஜினாமா

(கொழும்பு)

ஐ.தே.க சார்பில் தேர்தலில் போட்டியிடும் பொருட்டு சில நாட்களுக்கு முன்பே லேக்ஹவுஸ் நிறுவன தலைவராக நியமிக்கப்பட்ட சரத் அமுனுகம தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

# 5 லட்சம் வாக்குகள் அஷ்ரப், தொண்டா உறுதி

(கொழும்பு)

சந்திரிகா குமாரணதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு முஸ்லிம்களின் 500,000 வாக்குகளை பெற்றுத் தருவதாக முஸ்லிம் காங்கிரஸ் உறுதியளித்துள்ளது.

கான தீர்வுகாண பேச்சு நடத்தவும் மலையக மக்களுக்கு மேலும் நிவாரணங்கள் வழங்கவும் ஐ.தே.க. முன்வந்துள்ளதாக தொண்டமான் குறிப்பிட்டார்.

## வீடுடைத்து திருடியவர்க்கு அபராதமும் சிறையும்

வீடு உடைத்து நகை, பணம் ஒப்புக்கொண்டதையடுத்து

இந்த வகையில், 1977 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் வரலாறு முற்றிலுமே இரத்தத்தால் தோய்ந்தது. 1977இல், ஆரம்பித்த இனப் படுகொலைகள் இன்றுவரை தொடர்ந்த வண்ணமே உள்ளன. பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் ஐ. தே. கட்சி நடத்திய இனக்கலவரங்களினாலும், உத்தரவிட்ட இராணுவ நடவடிக்கைகளினாலும் கொன்றொழிக்கப்பட்டனர். இதற்கான முழுப் பொறுப்பையும், அன்று தொடக்கம் இன்றுவரை ஆட்சிக்குத் தலைமை தாங்கிய முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா மற்றும் இன்றைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உட்பட ஐ. தே. கட்சியைச் சேர்ந்த அனைவருமே பொறுப்பேற்க வேண்டும்.

இதைத் தவிர, 1987 இல், தொடங்கிய இரண்டாவது ஜே. வி. பி. கிளர்ச்சியை அடக்க ஐ. தே. கட்சி அரசாங்கம் 60,000 - 100,000இடைப்பட்ட சிங்கள இளைஞர்களையும், யுவதிகளையும் கொன்றொழித்தது. இதற்கான முழுப்பொறுப்பையும் இன்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மீது பலர் சுமத்த முற்பட்டாலும் அதற்கு அவர் மட்டுமல்ல அவருடன் ஆட்சியில் பங்கு கொண்ட அனைவருக்குமே பங்கு உண்டு.

இதேசமயம், இன்று சிறிலங்காவில் இருந்து வெளிவரும் அதிர்ச்சி தரும் தகவல்கள், ஆளும் ஐ. தே. கட்சிக்கும் பாதாள உலக கிரிமினல்களுக்கும் இடையில் உள்ள நெருக்கமான உறவுகள் பற்றி வெளிவரத் தொடங்குகின்றன. ஐ. தே கவின் முன்னணிப் பிரமுகர்கள் ஒவ்வொருவரும், அரசியல் வாதிகளாக வெளியுலகில் இருந்தவேளை, பாதாள உலகின் மன்னர்களாகவும் இருந்துள்ளமை இன்று இரகசியமானதல்ல. இவர்களின் கொலை, மோசடி, கடத்தல் நடவடிக்கை பற்றிய பட்டியல் விரைவில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது பல ஐ. தே. கவின் சிரேஷ்ட அரசியல் வாதிகளுக்கு சங்கடங்களை ஏற்படுத்தலாம் என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், சஜீத் பிரேமதாசா கூறும் குற்றச்சாட்டு உண்மையாகினும் எத்தகைய பெறுமதிவாய்ந்தது என்பதே கேள்வியாகும்.

ஏனெனில் சிறிலங்கா அரசியல்வாதிகளை இன்று கொலைகளில் இருந்தும், மோசடிகளில் இருந்தும் பிரித்துப் பாக்க முடியாத நிலையொன்று உருவாகி விட்டது. மறுவளமாகக் கூறப் போனால், கொலையும், மோசடியும் சிறிலங்கா ஜனநாயகத்தின் பிரிக்கமுடியாத அம்சமாகவும், அதற்கான 'பாதுகாவலனாகவும்' மாறி விட்டது.

---

## கிளி. வைத்தியசாலை புனரமைக்க அங்கீகாரம்

விமானக் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையை புனரமைப்பு செய்வதற்காக சிறிலங்கா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு சுமார் 53 இலட்சம் ரூபாவுக்கான திட்டம் ஒன்றிற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

அதற்கான முதற்கட்ட ஒதுக்கீடான ரூபா 2.5 மில்லியன் வழங்கப்பட்டிருப்பதுடன், கட்டட அமைப்பிற்கான தடைசெய்யப்பட்ட பொருட்களை கிளிநொச்சிக்கு கொண்டுவருவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அறியப்படுகிறது,

## ஜே.வி.பி. பொதுக் கூட்டம் கொழும்பில் ஏற்பாடு

ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் தேசிய காப்பு முன்னணி என்ற பெயரில் நுகேகொடையில் ஜூலை 16 ஆம் திகதி பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தல் பிரசார கூட்டத்தில் சோமவன்ச அமரசிங்க பேசுவார்என அறிவிக்கப்பட்டுள்ளது. இம் முன்னணிக்கு ஐ. தே. க. ஆதரவளிப்பதாக சந்திரிகா குமாரணதுங்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொதுத்தேர்தலில் மட்டுமல்ல ஜனாதிபதி தேர்தலிலும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு முஸ்லிம் காங்கிரஸ் உதவியளிக்கும் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

எம்மை சிலர் இன ரீதியான கட்சி என்கின்றனர் சிறுபான்மை குழுக்கள் பெரும்பான்மை குழுக்களுடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இதனாலேயே பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தம் செய்ததாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் மேலும் தெரிவித்தார்.

இதே சமயம் ஐ. தே. க. விற்கு 500, 000 மலையக வாக்குகளை வழங்குவதாக இ. தொ. கா. தலைவர் தொண்டமான் உறுதியளித்துள்ளார். இனப்பிரச்சினைக்

## விமானப்படை தலைமையகம் இடம்மாற்றுவதே நல்லது

### ஐ. சி. ஆர். சி. கொழும்பு தலைவர் டுவோர்

(கொழும்பு)

தும்முல்ல சந்தியில் விமானப் படை தலைமையகம் அருகே அமைந்திருந்த சிறீலங்காவிற்கான சர்வதேச செஞ்சிலுவை சங்க தலைமையகம் கடந்த வியாழனன்று மீண்டும் திறக்கப்பட்டது. விமானப்படை தலைமையகம் கரும்புலிகள் தினத்தன்று தாக்கப்படலாம் என அஞ்சி இவ்வலுவலகம் கடந்த முதலாம் திகதி மூடப்பட்டது.

இவ்வலுவலகத்தில் பணியாற்றும் 80 ஊழியர்களின் பாதுகாப்புக் கருதியே அலுவலகம் மூடப்பட்டதாக ஐ. சி. ஆர். சியின் தலைவர் டொமினிக் டுவோர் தெரிவித்தார். எதிர்காலத்தில் இவ்வலுவலகத்தை தும்முல்ல சந்தியிலிருந்து நிரந்தரமாக இடம்மாற்றும் எண்ணம் ஏதும் உண்டா என்று அவரிடம் கேட்கப்பட்டபோது அப்படியான எண்ணம் ஏதும் இல்லை ஆனால் இந்த பகுதியை விட்டு விமானப்படைத் தலைமையகம் அப்புறப்படுத்தப்படுவதே நல்லது என அவர் சுட்டிக்காட்டினார்.

## சிறிமாவோவின் கொள்கை சந்திரிகாவால் நாசம்

### தினேஷ் குணவர்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி தனித்துப் போட்டியிடும் எனவும் சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கொள்கைகளை நாசமாக்கி விட்டது எனவும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தனா தெரிவித்துள்ளார்.

தினேஷ் குணவர்தனா ஆரம்பத்தில் சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டு சேர முயன்றதும் இது சந்திரிகாவினால் நிராகரிக்கப்பட்டதும் தெரிந்ததே.

---

வீடு உடைத்து நகை, பணம் என்பவற்றை திருடிய நபருக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் சாவகச்சேரி நீதிமன்றினால் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் தவசிகுளத்தில்வீடொன்றில் நகை, பணம் என்பனவற்றை இவர் திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்டது. அந்நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து குற்றப்பணமாக மூவாயிரம் ரூபாவும் ஒரு மாதகால சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. குற்றப்பணம் கட்டத்தவறின் 120 நாள் சிறைத் தண்டனையும் வழங்கப்படும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. நகையை திருப்பி ஒப்படைக்குமாறும் கோரப்பட்டது. (86)

### உலகக் கோப்பை உதைபந்தாட்டம்

## அரையிறுதிப் போட்டிக்கு பிரேசில், இத்தாலி தெரிவு

(வாஷிங்டன்)

உலகக் கோப்பை உதைபந்தாட்டத்தில் இத்தாலியும் பிரேசிலும் அரையிறுதி சுற்றில் விளையாட தகுதி பெற்றுள்ளன. கடந்தசனியன்று நடைபெற்ற கால் இறுதி ஆட்டங்களில் இத்தாலி ஸ்பெயின் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து ஆட்டம் முடிவடைய இரு நிமிடங்களே இருந்த போது இரு அணிகளும் தலா ஒரு கோலுடன் சமனாக இருந்தன. இத்தாலியின் ரோபோற்றோ பாகியோ கோல் ஒன்றை அடித்ததை தொடர்ந்து இத்தாலி அரையிறுதிக்கு தகுதிபெற்றது. கால் இறுதி போட்டியில் பல்கேரிய - ஜேர்மன் அணிகளிடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் இத்தாலி அரையிறுதிப் போட்டியில் மோதும்

மற்றுமோர் ஆட்டத்தில் பிரேசில் நெதர்லாந்தை 3: 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்கு தெரிவானது. கால் இறுதிப் போட்டியில் ருமேனியா - சுவீடன் அணிகளுக்கிடையிலான போட்டியில் தெரிவாகும் அணியுடன் பிரேசில் அரை இறுதியில் மோதவுள்ளது.

## பல்கேரியா, சுவீடனும் அரையிறுதிக்கு தெரிவு

(வாஷிங்டன்)

உலகக் கோப்பை உதைபந்தாட்டத்தில்அரையிறுதிப் போட்டியில் விளையாட பல்கேரியாவும், சுவீடனும் தெரிவாகியுள்ளன. நேற்று முன்தினம் நடைபெற்ற கால்இறுதிப் போட்டியில் பல்கேரியா ஜேர்மனியை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. தற்போதைய உலகச் சாம்பியனான ஜேர்மனியை இதுவரை எப்போதுமேஅரையிறுதிக்கு தெரிவாகாத பல்கேரியா எதிர்த்து ஆடி மூன்று நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களை போட்டது குறிப்பிடத்தக்கது.

மற்றுமோர் கால் இறுதி போட்டியில் சுவீடன் ருமேனியாவை பனால்டிமுறை மூலம் 5:4 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது. ஏற்கனவே இத்தாலி, பிரேசில் அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளன. அரையிறுதிப் போட்டிகள் நாளை புதன்கிழமை நடைபெறும். இதில் இத்தாலி பல்கேரியாவையும், பிரேசில் சுவீடனையும் எதிர்த்து விளையாடவுள்ளன.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

## தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு - 1994

### எழுத்துத் தேர்வு நேர அட்டவணை

| நாள் | தேதி / கிழமை | முற்பகல் வேளை | பிற்பகல் வேளை |
|---|---|---|---|
| 01 | 1994 - 08 - 12 வெள்ளி | 1 தமிழ் மொழியும் இலக்கியமும் i 8-30 — 9-15 ii 9-45 — 11-45 | 1 தமிழ்மொழியும் இலக்கியமும் ii 1-00 — 3-00 |
| 02 | 1994 - 08 - 13 சனி | 8 ஆங்கிலம் i 8-30—9-30 ஆங்கிலம் ii 9-45—11-45 | 9-7 சமயம் i 1-00 — 2-00 ii 2-15 — 4-15 |
| 03 | 1994 - 08 - 16 செவ்வாய் | 2 கணிதம் ii 8 30 — 11-30 | 2 கணிதம் i 1-00 — 2-00<br>23 தட்டெழுத்துத் தொகுதி i 2-15 — 4-15 |
| 04 | 1994 - 08 - 17 புதன் | 3 விஞ்ஞானம் ii 8-30 — 11-30 | 3 விஞ்ஞானம் i 1-00 — 2-00<br>23 தட்டெழுத்துத் தொகுதி ii 2-15 — 4-15 |
| 05 | 1994 - 08 - 18 வியாழன் | 4 வரலாறும் சமூகக்கல்வியும் ii 8-30 — 11-30 | 4 வரலாறும் சமூகக்கல்வியும் i 1-00 — 2-00<br>23 தட்டெழுத்துத் தொகுதி iii 2-15 — 4-15 |
| 06 | 1994 - 08 - 19 வெள்ளி | 13-21 தொழில்நுட்பப் பாடம் i 8-30—9-30 ii 9-30 — 11-30<br>23 சுருக்கெழுத்து 9-00 முதல்<br>22 வர்த்தகமும் கணக்கியலும் ii 8-30 — 10-30 | 22 வர்த்தகமும் கணக்கியலும் i 1-00 — 2-00 |
| 07 | 1994 - 08 - 20 சனி | 9-11, 24 அழகியல் i 8-30 — 9-30 ii 10-00—12-00<br>12 ஆங்கில இலக்கியம் 8-30 — 11-30 | 9 அழகியல் — சித்திரம் iii 1-00 — 3-00 |

# சிறிலங்காவில் சுதந்திரமான தேர்தல் நடந்து நீண்ட நெடுங்காலமாகிவிட்டது

(கொழும்பு)

சிறிலங்காவில் சுதந்திரமான - நியாயமான தேர்தல்கள் நடந்து நெடும் காலமாகிவிட்டது. இவ்வாறு பி. பி. சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார்.

கடந்த 89இல் தேர்தல் நடந்தபோது இலங்கையின் வடக்கு - கிழக்கில் இந்திய அமைதிப்படை இருந்தது. தெற்கில் இராணுவம் கொடூரமான முறையில் புரட்சியை அடக்கியது. அதற்கு முன்பு 83இல் நாடாளுமன்றத் தேர்தல்கள் இரத்துச்செய்யப்பட்டுவிட்டன. அப்போதைய ஜனாதிபதி சந்தேகத்துக்குரிய மக்கள் கருத்து வாக்கொடுப்புப்படி நாடாளுமன்ற ஆயுட்காலத்தை மேலும் ஆறு ஆண்டுகள் நீடித்தார். எனவே ஓரளவு சாதாரணமாக நடந்த தேர்தல் என்றால் அது 1977இல் தான்.

77ஆம் ஆண்டு தேர்தலில் தான் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் பிடித்தது. கடந்த 17 ஆண்டுகளில் அதன் சாதனையோ இல்லையோ எதுவும் தவிர்க்க முடியாதபடி இருக்கிறது.

இக்காலத்தில் ஐ. தே. க. திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் நாட்டை இந்த நூற்றாண்டுக்குள் வளர்ச்சிபெற்ற நாடாக்க ஐ. தே. க. முனைந்தது. ஆனால் ஐ தே க. வுக்கு பெருமை சேர்க்காத விடயம் அதன் ஆட்சியில்தான் மனிதவுரிமை மீறல் அதிகளவில் நடந்ததாகும்

மரணப்படைகளால் நாடெங்கும் பிணக்குவியலே கிடந்தது. அதேபோலவே, வடபுலத்தில் முழு அளவிலான விடுதலைப் போராட்டமும் வளர்ந்தது.

17 ஆண்டுகால அரசியலின் பின் இலங்கை மக்கள் மாற்றத்தைக்காண விரும்பும் மனநிலையிலிருக்கிறார்கள் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

யார் அந்த மாற்றத்தைத் தருவார்கள் என்பதே கேள்வி இளமையான தலைவர் சந்திரிகா குமாரணதுங்காவை கொண்ட பொதுமக்கள் முன்னணி சாதகமான நிலையிலிருப்பது தெரிகிறது. அவர்கள் சந்தைப் பொருளாதாரத்தின் சில அம்சங்களையாவது தக்கவைத்துக்கொள்வதாக கூறுகிறார்கள்.

தமிழ்ப் பிரிவினைவாத முயற்சிக்கும் தீர்வு காணப் போவதாக கூறப்படுகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்டபின் சிறுபான்மை இனக்கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதில் சந்திரிகா வெற்றி கண்டிருக்கிறார்.

தமிழர் பிரச்சினையில் அவர் மிதவாதப் போக்குடையவர் என்றே கருதப்படுகின்றது.

ஆனால், கடந்த மார்ச்சில் மாகாணசபைத் தோல்விகளிலிருந்து ஆளும் ஐ. தே. கவும் பல பாடங்களைக் கற்றிருக்கிறது. ஜனாதிபதி விஜேதுங்கா தமிழர் விரோதப் போக்கை கைவிட்டு சிறுபான்மையினரைக் கவர்ந்திழுக்க முயல்கின்றார்.

பிரேமதாசா காலத்திலிருந்து வரும் சர்வாதிகார காயங்களை ஆற்றவும் அவர் முயல்கின்றார். பிரேமதாசா காலத்தில் ஐ. தே. கவிலிருந்து வெளியேறிய பலர் உள்ளே வந்திருக்கின்றனர்.

ஆனால் ஆளும் கட்சிக்குள் ஊழல் என்ற போர்வை மறையாமல் நிற்கிறது.

எப்படியிருப்பினும், மக்கள் இம்முறை அமைதியாகத் தங்கள் வாக்குரிமையை காட்ட முனைந்து நிற்கின்றார்கள்.

இவ்வாறு பி. பி. சி. தன் விமர்சனத்தில் தெரிவித்திருக்கிறது.

# ஹேமா மீது திட்டமிட்டு கரி பூசப்பட்டது

### மோசமான பழிவாங்கல் என்கிறது பி. பி. ஸி-

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசாவின் பெயரை இறுதி நேரத்தில் வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கியதன் மூலம் அவர்மீது திட்டமிட்டு கரி பூசியுள்ளனர் என பி. பி. ஸி தெரிவித்தது.

பிரேமதாசா ஆதரவாளர் மீதுள்ள வஞ்சத்தை இதன் மூலம் டி. பி. விஜேதுங்கா முழுமையாக தீர்த்துக்கொண்டார் எனவும் இறுதி நேரம் வரை இவரின் பெயர் நீக்கப்பட்டமை குறித்து எதனையும் தெரிவிக்காத விஜேதுங்கா கொழும்பு மாவட்டச் செயலகத்தில் வைத்து இவ்வாறு செய்தமை மிகவும் மோசமான பழிவாங்கல் எனவும் பி பி. ஸி மேலும் கூறியது.

# 25 ஆயிரம் ஆதரவாளர் சந்திரிகாவிற்கு வரவேற்பு

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்துவிட்டு வெளியே வந்த சந்திரிகா குமாரணதுங்காவை அவரது ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்து வரவேற்றுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

25 ஆயிரத்துக்கு மேற்பட்ட அவரது ஆதரவாளர்கள் திரண்டு நின்று கோசம் எழுப்பியதாகவும் சந்திரிகா குமா...

கூடி நின்று கோஷம் எழுப்பியதாகவும் செய்திகள் தெரிவித்தன.

## இன்னிசை கானம்

சுதுமலை ஈஞ்சடி ஞான வைரவர் கோவில் அலங்கார உற்சவ 5-ம் திருவிழாநாளான இன்று இரவு சிறப்பு சொற்பொழிவை அடுத்து எஸ். ஜி. சாந்தன் இசைக்குழுவின் இன்னிசை கானம் இடம் பெறும்

# உணவுப் பொருளுடன் காங்கேசனில் 'றுகுணு'

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவு மற்றும் பொருட்களுடன் ''றுகுணு'' நேற்று காங்கேசன்துறை துறைமுகம்வந்தடைந்துள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தில்சிறிலங்கா படையினரின் சோதனையை முடித்துக்கொண்டு இக் கப்பல் இன்று காலை 9.00 மணிபளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இக் கப்பலில் இம் மாதத்திற்கான ஓய்வூதிய வவுச்சர்களும் மற்றும் யாழ் செயலகத்திற்கும் தனியார் துறையினருக்குமான உணவு மற்றும் பொருட்களும் எடுத்து வரப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(பா), (நி), (பே)

## நோயாளர் கவனத்திற்கு

வரும் வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச்செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் அன்று மதியம் 11.00 மணியளவில் யாழ்/ போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக்கொள்ளுகின்றார்.

## 10-ம் ஆண்டு நிறைவு விழா

(தென்மராட்சி)

கச்சாய் துறையூர் கலைமகள் சன சமூக நிலையத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று பி.ப. 4 00 மணிக்கு நிலையத்தில் செயலாளர் திரு. பா விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சுயசரிதை நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெறும்- இறுதியில் கலை நிகழ்வும் இடம்பெறும்.

(86)

# சைக்கிள் - ரக்ரர் விபத்தில் சைக்கிளில்வந்த பெண் பலி

(தென்மராட்சி)

மிருசுவில் பகுதியில் உழவு இயந்திரம்-சைக்கிள் விபத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றைய தினம் காலை மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் பகுதியில் வீதியால் வந்து கொண்டு இருந்த உழவு இயந்திரம் ஒன்று வீதியால் எதிரே வந்த சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதால் யுவதி படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு எடுத்து வரும் வழியில் மரணமானார். இவ் விபத்தில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த ஐயாத்துரை-புஸ்பராணி (வயது 20) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (86)

# இளைஞரின் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் காவல்துறையினரால் நேற்று யாழ். போதனா மருத்துவ மனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

செம்மாதெரு யாழ்ப்பாணத்தை சேர்ந்த விஜயேந்திரன் (வயது 23) என்பவரே இறந்தவராவார். இவர் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவன் என தெரிய வருகின்றது. (சி)

## கொழும்பு

கொழும்பிலபிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனுவையும், பொதுமக்கள் முன்னணி சார்பில், கிங்ஸ்லி பி விக்கிரமரட்ணாவும், மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தினேஷ் குணவர்த்தனாவும், நவசமசமாஜக் கட்சி சார்பில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணாவும் சிறிலங்கா மீட்பு முன்னணி சார்பில் கருணாரட்ண கொடித்துவக்குவும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் சண்முகநாதனும், ரெலோ சார்பில் முத்தையாகனகராஜாவும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

புளொட், ரெலோ, ஈரோஸ் என்பன 5 மாவட்டங்களில் இணைந்து போட்டியிடுகின்றன.

கம்பஹா மாவட்டத்தில் நான்கு கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. ஜனநாயக தொழிலாளர் காங்கிரசும், வெகுஜன முற்போக்கு முன்னணியும் சமர்ப்பித்த வேட்பு மனுக்

# 7ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 03 - 04 - 1968

வீரச்சாவு: 12 - 07 - 1987

## 2-ம் லெப். அனுரா (டெனிஸ்)

விடுதலை வேட்கையுடன்
வீரத்துடன் சென்றவனே
அந்நியன் குண்டை தமிழ்க்காய்
அன்புடன் ஏற்றவனே
அண்ணன் வழியில்
அணி திரண்ட வேங்கையே!
உனது தாகம் தீரும்வரை
உறுதியது தளராது.

(9903) - நண்பர்கள்

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### தேவதாஸ் ரமணன்
(எமது சக மாணவன்)

தோற்றம்: 09-03-1978

மறைவு: 12-06-1994

இரப்பவர்க்கு இனிதிரங்கும் இரமணா நீதான்!
இரவெல்லாம் இனி துறங்காது இயமனோடிணைந்து
இரவி வர வருவேனென இட்ட திட்டமிதுவோ
இரக்கமற்ற முடிவேன் இமைக்குமுன் இடி வீழ்ந்ததுவே
இன்பமாய் எம்மோடு இருந்த நாட்கள் இறந்து
இன்றோடு முப்பத்தொன்றென்றெழுது மொரு நாளோ
இடுகாட்டின் இளையவனே இடமெதற்குக் கேட்டாய்
இனிமேலும் எமைப்பிரியாதினிது வாழ வாராய்!

11-ப் ஆண்டு 'ஏ' பிரிவு
மாணவர்கள்,
யா | ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

(8786)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சமர்ப்பித்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. சந்திரிகா குமாரணதுங்க, பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பு மனுவை தாக்கல் செய்தார்

காலி மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் ரிச்சார்ட் பத்திரான வேட்பு மனு தாக்கல் செய்தார்.

குருநாகல் மாவட்டத்தில் நான்கு கட்சிகள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தன. ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் யூ.பி. விஜேகோன் வேட்புமனுவை தாக்கல் செய்தார். இங்கு பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனுவை பெஸ்டஸ் பெரேரா தாக்கல் செய்தார்- பொது மக்கள் முன்னணியின் வேட்புமனுவை எச். பி. ஆர். ஜயரத்ன தாக்கல் செய்தார்.

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான சுயேட்சைக் குழுவொன்று தெல்லிப்பழையில், யாழ். தேர்தல் மாவட்டத்துக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்தது,

யாழ். ஸ்ரீதரில்
தினசரி 4-00 மணி
உயிராயுதம்
தினசரி 6-00 மணி
சனி, ஞாயிறு 10-30
6.00 மணி
JURASSIC PARK
(சி-9786)

ரணதுங்காவிற்கே இவ்வளவு தொகையில் ஆதரவாளர்

### கட்சி

வழமைக்கு திரும்பியதாகவும் தெரிய வருகின்றது.

புத்தளம பகுதியில் பாரிய அளவில் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையே மோதல் உருவாகியதகவும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியதை யடுத்து அக் கூட்டத்தினர் கலைந்து சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### வீரச்சாவு

சிவகுமார், மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவார் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### இராணுவத்

போரிடுகிறது என குறிப்பிடும் சண்டே ரைம்ஸின் பாதுகாப்புச் செய்தியாளர் கடந்த தசாப்த காலத்தில் விடுதலைப்புலிகளின் வளர்ச்சியை அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ தடுக்க அரசியல் வாதிகளும் இராணுவமும் தவறிவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார் தினமும் அரசுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2,0 வேட்

மேலும் குறிப்பிட்டார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பித்துள்ள போதும் பிரசார நடவடிக்கைகள் நேற்று முதல் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### வடக்கு

இலங்கை உள்நாட்டுப் போரினால்பாதிக்கப்பட்டவர்களின் சுகாதார வசதி மற்றும் நிலைமைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இம்மாநாட்டின்மூலம் தமிழ் அகதிகளுக்கு சுகாதார பராமரிப்பு மற்றும் பலவசதிகளை செய்துவரும் அரச சார்பற்ற நிறுவனங்களையும், தனியார்களையும் உதவி வழங்கும் நிலையங்களையும் ஒன்றுபடுத்தி ஒருமித்த செயற்பாட்டைப் பெறமுடியும் என மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### ரணில்

ரம் அவசரமாக ஐ தே. க வின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகராவை மாவட்ட அரசாங்க செயலகத்திற்கு அழைத்தார்-

டாக்டர் காமினி விஜேசேகரா மற்றும் ரணில் விக்கிரம சிங்கா ஆகியோருடன் சுமார் முப்பது நிமிடத்திற்கும் அதிகமான நேரம் வாக்குவாதம் நடத்திய திருமதி ஹேமா வேட்பாளர் பட்டியலில் தமது பெயரைச் சேர்க்க வேண்டுமென பிடிவாதமாக வலியுறுத்தினார். எனினும் இவ் இருவரும் அவரது வேண்டுகோளுக்குசெவிசாய்க்காத நிலையில் திருமதி ஹேமா கண்ணீர் மல்க மாவட்ட அரசாங்க செயலகத்திலிருந்து வெளியேறினார்.

### சேமமடு

சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் மணியம் (சுப்பிரமணியம் நாகேந்திரன், இலுப்பைக்குளம் பாலமோட்டை ஓமந்தை), வீரவேங்கை பத்மசீலன் (கணபதிப்பிள்ளை பத்மநாதன், இரத்தினபுரம், கிளிநொச்சி) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## மரண அறிவித்தல்



### திருமதி துளசியம்மா கதிரவேலு

வண்ணார்பண்ணை நாவலர் வீதியைச் சேர்ந்த திருமதி துளசியம்மா கதிரவேலு நேற்றுக் காலை (11-7-94) சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற மலேசிய டாக்டர் கதிரவேலுவின் அன்பு மனைவியும். திருமதி மகேஸ்வரி அரியரத்தினம், விஜயசிங்கம் (துரை) (உரிமையாளர். கலாசோடா ஸ்தாபனம்), மகேந்திரன் (குணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். காலஞ்சென்ற வண்ணை வைத்தியாசன் வைரமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற அரியரத்தினம் (சிறாப்பர்), காலஞ்சென்ற நாகேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். பிரான்சைச் சேர்ந்த சரோஜினிதேவி கதிர்காமநாதன், ஜெயதேவி, நிர்மலாதேவி, சுதந்திராதேவி, சகுந்தலாதேவி. மோகனரத்தினம் (கனடா), வத்சலாதேவி, தயாபரன் (தயா அச்சகம்) விஜயராணி தியாகலிங்கம் (பிரான்ஸ்), விஜயதேவி புவனேந்திரன், தயானந்தன்(கலா சோடா),விஜயகுமாரி சோதியார்க் கண்டன், விஜயகௌரி, விஜயகலா, தயாபாலன் (ஆசியர், யாழ் மத்திய கல்லூரி), நிரஞ்சன் (சுவிஸ்), கிருபாகரன். வசந்தன் ஷர்மிலன், துஷ்யந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை, காலை 10-30 மணியளவில் அன்னாரது நாவலர் வீதி, இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

166|2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

க. விஜயசிங்கம் (துரை)
(கலா சோடா)

(8785)